**Community Townhall Meeting Minutes**

## ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற பகிரங்க பொதுக்கூட்ட அறிக்கை

**Location:** Scarborough Civic Centre
**Start time:** 2:30PM
**End time:** 4:30PM
**Number of people in attendance:** 120 people

**இடம்:** ஸ்காபரோ நகரசபை மண்டபம்
**கூட்ட ஆரம்பம்:** பிற்பகல் 2:30
**கூட்ட நிறைவு:** பிற்பகல் 4:30
**கலந்துகொண்டோர் எண்ணிக்கை:** 120

**Committee members in attendance:**
Pamela Ketheeswaran
Ramanathan Lambotharan
Vithu Ramachandran
Keerthana Rang
Nedra Rodrigo
Vadivelu Santhakumar
Neethan Shan
Siva Vimalachandran

**சமூகம் அளித்த வழிப்படுத்து குழு உறுப்பினர்கள்:**
பமீலா கேதீஸ்வரன்
இராமநாதன் லம்போதரன்
விது இராமச்சந்திரன்
கீர்த்தனா ராங்
நேத்ரா றொட்றிகோ
வடிவேலு சாந்தகுமார்
நீதன் சண்
சிவா விமலச்சந்திரன்

**Presentation:**
Rang welcomed guests. Shan provided a moment of silence and a land acknowledgement. Rang thanked companies that have provided in-kind support to the project thus far and acknowledged elected officials in attendance. Councillor McKelvie provided remarks on behalf of the Mayor. Vimalachandran and Rodrigo went through the attached presentation in roughly 40 minutes.

**படக்காட்சியுடனான விளக்கம்:**
கீர்த்தனா ராங் வரவேற்புரை வழங்கினார். நீதன் சண் அமைதி வணக்கத்தை வழிப்படுத்தி, ரொறன்ரோவின் பூர்வீகக் குடிகளுக்கான நிலக்கடப்பாட்டு நன்றியையும் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து கீர்த்தனா வருகை தந்திருந்த தேர்தெடுக்கப்பட்ட அரசாங்க உறுப்பினர்களை வரவேற்று, தமிழ்ச் சமூக

மையம் ஒன்று அமைவது சம்பந்தமான முன்னெடுப்புகளுக்கு இதுவரை ஆதரவு நல்கிய அமைப்புகளுக்கும், நபர்களுக்கும் நன்றி தெரிவித்தார். ரொறன்ரோ மாநகரசபை உறுப்பினர் மக்கேல்வி நகரபிதாவின் சார்பில் குறிப்புரை வழங்கினார். இதைத் தொடர்ந்து சிவா விமலச்சந்திரனும், நேத்ரா றொட்றிகோவும் 40 நிமிடங்களுக்கு படக்காட்சியுடனான விளக்கத்தை அவையோருக்கு வழங்கினார்கள்.

**Question and answer period with the audience:**

**அவையோருக்கான கேள்வி பதில் நேரம்:**

*Q – is the incorporation provincial or federal from the beginning? The provincial legislation is being phased out so it is important to check.*
A – Vimalachandran advised that Counsel has been working on this. They are not 100% sure yet but they will advise by the end of the month.

**அவையினர் கேள்வி:** இந்த அமைப்பானது மத்திய அரசின் கீழ்ப்பட்டதா அல்லது மாகாண அரசின் கீழ்ப்பட்டதா? மாகாண அரசின் இது சம்பந்தமான சட்டவாக்கமானது காலதாமதப்படுவதால் இதைக் கவனத்தில் எடுப்பது அவசியம்.

**விமலசந்திரன் பதில்:** சபை இது பற்றி நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றார்கள். இது பற்றிய விபரங்கள் இன்னமும் முழுமையாக உறுதிப்படுத்தப்படவில்லை; ஆயினும் இம் மாத இறுதிக்குள் இவ் விபரங்கள் அறிவிக்கப்படும்.

*Q – You showed some data about the individuals who filled out the online survey. There are not a lot of seniors. To get seniors to fill out the survey, please put the survey in Tamil newspapers so they can fill it out. I also noticed that immigration related programs are not included as an option for the survey.*
A – Vimalachandran mentioned that the Committee will be going to events to outreach to people who may not have seen the survey online. He also said that the Committee has encouraged media to put this information in the papers. The Committee needs people to volunteer and help us reach more parts of the community. Vimalachandran also pointed out that in the survey, you can add your comments and that immigration services has been written several times from respondents. Shan mentioned that the survey is only one part of the consultation process; the Committee will be meeting with organizations in the community to tell us the kind of programming they need and that will provide a more fulsome consultation.

**அவையினர் கேள்வி:** நீங்கள் தனி நபர்களின் கருத்துக்கணிப்பு பற்றிய விபரங்களை இங்கு காட்டினீர்கள். அதிலே முதியோர்களின் பங்களிப்பு குறைவாக இருக்கிறது. தமிழ்ப் பத்திரிகைகளில் இந்த கருத்துக்கணிப்பு படிவங்களைப் பிரசுரித்தால் முதியோர் அதனை பூர்த்திசெய்து அனுப்பக்கூடியதாக இருக்கும். அடுத்ததாக குடிவரவு பற்றிய ஆலோசனைகள் கருத்துக்கணிப்புப் படிவத்தில் உள்ளடக்கப்படவில்லை.

**விமலசந்திரன் பதில்:** இந்தகுழுவானது சமூக நிகழ்வுகளுக்கு நேரடியாகச் சென்று இணையத்தளத்தில் கருத்துக்கணிப்பில் பங்குகொள்ள இயலாதவர்களை அணுகுவதற்கு உள்ளது.
தமிழ்ப் பத்திரிகைகள் இத்தகவல்களைப் பரிமாறுமாறு குழு கேட்டுக்கொண்டுள்ளது. இவ்வாறு சமூகத்தின் பல்வேறு பிரிவினரையும் சென்றடைவதற்கு எமக்குத் தொண்டர்கள் பலர் தேவையாக உள்ளார்கள். கருத்துக்கணிப்பு படிவத்தில் உள்ளடங்காத விடயங்களை மேலதிகமாகப் பதிவிடுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. குடிவரவு சம்பந்தமாகவும் பலர் இங்கு தமது கருத்துக்களைப் பதிவிட்டிருக்கின்றார்கள்.

**நீதன் சண் பதில்:** இந்தக் கருத்துக்கணிப்பு முழுமையான சமூகப்பிரதிபலிப்பின் ஒரு பகுதியே. வருங்காலங்களில் தமிழ்ச்சமூகத்தின் பல்வேறு அமைப்புகளையும் நேரடியாகச் சந்தித்து கருத்தறியும்போது எதிர்பார்க்கப்படும் சேவைகள் பற்றிய ஒரு முழுமையான சமூகப்பிரதிபலிப்பை சபை உள்வாங்கக்கூடியதாக இருக்கும்.

*Q – Have you raised any funds? If not, how have you funded all your efforts to date? What are expectations if I want to volunteer?*
A – Vimalachandran said the Committee has not raised any funds. He advised that committee members have been donating money where needed. He said the Committee doesn't want to fundraise until it is confident it knows what it is the community is building. On volunteering, Vimalachandran said there is no floor or ceiling for volunteers and that the Committee will take any support. Projects have various categories of involvement; everything from technical to community outreach. www.tamilcentre.ca has information.

**அவையினர் கேள்வி:** நீங்கள் நிதி ஏதாவது சேகரித்தீர்களா? இல்லாவிடில் எவ்வாறு இதுவரையான முயற்சிகளுக்கான நிதித் தேவையை எதிர் கொள்கின்றீர்கள்? நான் ஒரு தொண்டராக இணைய விரும்பினால் அதற்கான உங்கள் எதிர்பார்ப்புகள் என்ன?

**விமலசந்திரன் பதில்:** குழு எந்தவிதமான நிதி சேகரிப்பையும் செய்யவில்லை. குழு உறுப்பினர்களின் சொந்த பங்களிப்பினாலேயே இதுவரையான தேவைகள் ஈடுசெய்யப்படுகின்றன. சமூகமானது எந்தவிதமான கட்டுமானத்தை அமைக்கப்போகின்றது என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானித்து அறியும்வரை குழுவானது எந்தவிதமான நிதி சேகரிப்பிலும் ஈடுபட விரும்பவில்லை.
தொண்டராக இணைந்துகொள்வதற்கு எந்தவிதமான வரையறைகளும் இல்லை. குழுவுக்கான தொழில்நுட்ப ஆலோசனையில் இருந்து சமூகத்தைச் சென்றடைதல் வரை பல விதங்களில் தொண்டர்கள் தம் பங்களிப்பை வழங்கலாம். மேலதிக விபரங்கள் குழுவின் www.tamilcentre.ca என்னும் இணையத்தளத்தில் உள்ளன.

*Q – Looking at the survey, there is nothing specifically for young people to just hang out.*
A – Vimalachandran said that the Committee developed the consultation tool with two considerations. 1) The first round of general programming identified in the survey were ones raised in the previous townhall. The Committee wanted to make sure the ones already raised

were recognized. 2) The Committee did not want so many items on the survey. The Committee put the items the community wanted to see and left a comment box for people to provide their own ideas. The Committee will consult with organizations in the community to make sure programming reflects all age groups and needs of the community.

**அவையினர் கேள்வி:** கருத்துக்கணிப்பில் இளைஞர்கள் கூடி இருந்து நேரம் போக்குவதற்கான  எந்தவிதமான இடங்களும் காண்ப்படவில்லை.

**விமலசந்திரன் பதில்:** குழுவானது கருத்துக்கணிப்பு வடிவத்தை இரு நோக்குகளுடன் தயாரித்தது.

1) எமது முதலாவது பகிரங்க பொதுக்கூட்டத்தில் பொதுமக்களாலும் அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை வைத்து அவ்விடயங்களை உள்ளடக்கியதாக இது வடிவமைக்கப்பட்டது.

2) அதிக எண்ணிக்கையிலான உள்ளடக்கங்களை படிவத்தில் அடைத்து நிரப்புவதை குழு விரும்பவில்லை. மாறாக இவற்றில் உள்ளடங்காத தமது கருத்துகளையும் பதிவிடுவதற்கென ஒரு தனியிடம் படிவத்தில் ஒதுக்கப்பட்டது. இக்குழுவானது சமூகத்தின் பல்வேறு அமைப்புகளையும் சந்திப்பதன் மூலம் இந்த கட்டமைப்பானது  பல்வேறு வயதுப்பிரிவினரினதும் பலவகைப்பட்ட தேவைகளையும் உள்வாங்கிப் பிரதிபலிப்பதை உறுதிசெய்யும்.

*Q – How are you ensuring that all political parties will be involved?*
A – Vimalachandran responded saying that there are certain milestones that this project needs to achieve. Land is a big component right now and so the Committee actively reached out to those elected officials. Rang said that the Committee has reached out to all three levels of government for meetings in Scarborough. The Committee will then be reaching out to a wider group of elected officials, candidates and others who are interested.

**அவையினர் கேள்வி:** அனைத்து அரசியல் கட்சிகளும் பாரபட்சமின்றி இம்முயற்சியில் உள்வாங்கப்படுவதை எவ்வாறு உறுதி செய்கின்றீர்கள்?

**விமலச்சந்திரன் பதில்:** இக் குழுவானது இப்பொழுது சில மைல்கல்களை இலக்கு வைத்துச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது. றொறன்ரோவில் தமிழ்ச் சமூக மையத்துக்கான நிலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வது இவற்றில் முதலிடம் வகிக்கின்றது. இது  சம்பந்தமாக றொறன்ரோவில் உள்ள மக்களால் தெரிவு செய்யப்பட்ட  அரசாங்க உறுப்பினர்களை அணுகியுள்ளோம்.

**கீர்த்தனா ராங் பதில்:** குழுவானது மத்திய, மாகாண, மாநகரசபை ஆகிய மூன்று மட்டங்களிலும் உள்ள அரசாங்கங்களையும் சந்திப்புகளுக்காக அணுகியுள்ளது. இதற்கும் அப்பால் பரந்த மட்டத்தில் ஏனைய அயல் நகரசபைகளையும், உறுப்பினர்களையும், வேட்பாளர்களையும், ஆர்வலர்களையும் குழு நிச்சயமாக அணுகும்.

*Q – How will you be collecting opinions of grassroots organizations?*

A – Vimalachandran made a list of all of the organizations. The Committee will be asking all of them to meet to get their input. Several organizations have already been a part of the process. Vimalachandran asked that any audience members who are a part of an organization to take a look at the website and fill out an endorsement form to support the project.

**அவையினர் கேள்வி:** சமூகத்தின் அடிமட்ட அமைப்புகளிடம் இருந்து எவ்வாறு கருத்துக்கள் அறியப்போகின்றீர்கள்?

**விமலச்சந்திரன் பதில்:** குழுவானது சமூக அமைப்புகளின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்கின்றது. ஏற்கனவே பல அமைப்புகள் இதில் இணைந்துள்ளார்கள். எமது இணையத்தளத்திலும் இவ்வமைப்புகள் எமது முயற்சிக்கான தமது ஆர்வத்தையும் ஆதரவையும் தெரிவிப்பதன் மூலம் தமது இருப்பையும், பங்களிப்பையும் உறுதி செய்து கொள்ளலாம். குழுவானது இந்த அமைப்புகளுடனான சந்திப்புகளை வருங்காலத்தில் கோர இருக்கின்றது.

*Q – There are many cultural centres that have a senior's home / services as part of the building. Would you consider that in the future or as another phase of the community centre?*
A – Vimalachandran said that the Committee is in the consultation phase right now and that the Committee can definitely take that into consideration. Senior's services is being clearly identified by the community. Vimalachandran also said that the Committee will meet with organizations that work with seniors and will include it in the programming.

**அவையினர் கேள்வி:** பல சமூகங்களின் கலாச்சார அமைப்புகள் முதியோருக்கான இல்லங்களையும், சேவைகளையும் தமது செயற்பாட்டின் ஒரு பகுதியாகக் கொண்டுள்ளார்கள். நீங்களும் இவற்றை வருங்காலத்தில் உங்கள் செயற்பாட்டின் ஒரு பகுதியாகக் கொள்வீர்களா?

**விமலசந்திரன் பதில்:** குழுவானது இப்போது பல ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டு வருகின்றது. வருங்காலத்தில் இவற்றையும் அது கவனத்தில் எடுத்துகொள்ளும். முதியோர் சேவைகளுக்கான தேவைகள் சமூகத்தினால் தெளிவாக இனங்காணப்படுகின்றன. குழுவானது வருங்காலத்தில் முதியோர் அமைப்புகளையும் சந்திக்கவிருக்கின்றது; அச் சந்திப்புகளில் இவ்விடயங்களும் உள்வாங்கப்படும்.

*Q – What would the process for the consultation with the Indigenous community look like?*
A – Vimalchandran noted that the City has its own consultation process that the Committee will follow, but that the Committee hopes to go above and beyond where it can because the Committee wants a collaborative approach. Rodrigo said there are a number of people in the community that already have working relationships with different Indigenous groups. She said beyond what is outlined by the City, the Committee will use those relationships and speak to people one on one so that the Committee will follow Indigenous protocol, not just the City's.

**அவையினர் கேள்வி:** பூர்வீகக் குடிகளுடனான ஆலோசனைக்கான படிமுறை எவ்வாறு இருக்கும்?

**விமலச்சந்திரன் பதில்:** நகரசபை தனக்கென இதற்கான ஆலோசனைப் படிமுறைகளைக் கொண்டுள்ளது. நாம் கூட்டுச்சமூகப் பொறுப்புணர்வு நோக்கில் இவற்றோடும், இவற்றுக்கு அப்பாலும் சென்று செயற்படுவோம்.

**நேத்ரா றொட்றிகோ பதில்:** எமது சமூகத்திலும் பலர் இங்குள்ள பூர்வீகக் குடிகளுடன் தொடர்புகளைப்பேணிச் செயற்பட்டு வருகின்றனர். எமது குழுவும் தனிப்பட்ட ரீதியில் பூர்வீகக்குடிகளை இவர்கள் மூலமாக அணுகி உரையாடி, எமது செயற்பாடுகள் நகரசபையின் பூர்வீகக் குடிகளுக்கான படிமுறைகளுக்கும் அப்பால் பூர்வீகக் குடிகளின் தனிப்பட்ட நடைமுறைகளோடும் ஒத்துச் செல்வதை உறுதி செய்வோம்.

*Q – After the program refinement, is there a consultant for the next stage of constructing the building.*
A – Vimalachandran that there are people outside of the Tamil community who are supportive and want to help but said the project is too premature to get into the design stages. In the coming weeks, the Committee will have a better idea of when it can engage with an architect and supporting consultants and will reach out.

**அவையினர் கேள்வி:** இந்த திட்டமிடல் செயன்முறைக்கு அப்பால் அடுத்த படிமுறையான கட்டுமானப்பணிக்கு பொறுப்பான நிர்மான ஆலோசகர் தெரிவுசெய்யப்பட்டுள்ளாரா?

**விமலச்சந்திரன் பதில்:** தமிழ்ச்சமூகத்துக்கு அப்பாலும் எமது திட்டத்துக்கு ஆதரவளிக்கும் பலர் உதவி செய்யத் தயார் நிலையில் இருந்தாலும் இந்நிலைக்குச் செல்வதற்கு எமது திட்டம் இன்னமும் மிக ஆரம்ப நிலையிலேயே உள்ளது என்பது அவர்கள் கருத்தாகும். எமது குழுவானது வருகின்ற வாரங்களில் இது பற்றிய மேலும் தெளிவான நிலையை அடையும்போது கட்டட வடிவமைப்பாளர், நிர்மாண ஆலோசகர் முதலானோரின் சேவைகள் தேவைப்படும் காலம் பற்றித் தீர்மானிக்கலாம். அப்போது நாம் அவர்களை அணுகுவோம்.